சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி

OS.187/2023

நாள்.13.03.2026

வா.சா.1. 3 முதல் 5 பிரதிவாதிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை :–

தாவா சொத்துக்கள் எனக்கு உரிமையுடைய சொத்துக்கள் என பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதேபோல 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களை பொறுத்து ஆவணங்களை ஏற்படுத்தி கொடுக்க முயற்சி செய்வதாகவும், அதனை பதிவு செய்து கொடுக்க கூடாது என இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். எந்த ஒரு சொத்தினையும் சொத்துக்கு உரிமையாளர் பதிவிற்காக உரிய ஆவணங்களுடன் தாக்கல் செய்யும் போது பதிவு சட்டப்படி மறுக்க இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து எங்களுக்கு உரிமையுடைய சொத்து என்பதனை நாங்கள் தான் நிரூபிக்க வேண்டும் என்றும், அவ்வாறு நிரூபிக்காத பட்சத்தில் தாவா சொத்துக்குரிய நபர் உரிய ஆவணங்களுடன் இந்த பிரதிவாதி அலுவலகத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்தால் அதனை பதிவு செய்ய பதிவு சட்டப்படியும், வழிகாட்டுதல் படியும் மறுக்க இயலாதது என்பதால் நான் கோரியுள்ள பரிகாரம் என்பது கிடைக்ககூடியது அல்ல என்பதுவும்,

இந்த பிரதிவாதிகளை பொறுத்து தள்ளுபடி செய்யகூடிய வழக்கு என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.